This Question Paper contains 4 Printed Pages.]

**02A(A)**

# TAMIL, Paper-II

*(First language)*

**Parts A and B**

**Time : 2 hours 45 minutes]** **[Maximum Marks : 40**

குறிப்பு :

1. மாணவர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கு 15 நிமிடங்களும், விடைகளை எழுதிட 2 மணி 30 நிமிடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளது.
2. பகுதி – 'அ' விற்கான விடைகளை விடைத்தாளில் மட்டுமே எழுத வேண்டும்.
3. பகுதி – 'ஆ' விற்கான விடைகளை அதே வினாத்தாளில் எழுதி, பகுதி – 'அ' விடைத்தாளுடன் இணைத்து தர வேண்டும்.

## Part-A

**Time : 2 hours** **Marks : 30**

**I.** புரிந்து கொள்ளுதல் – விடையளித்தல் (12 மதிப்பெண்கள்)

**அ.** கீழ்க்காணும் துணைப்பாடப் பகுதியை வரிசைப்படுத்தி எழுதுக. *4×1=4*

**1.** (அ) வீ. அயோத்திதாச பண்டிதர் என்பாரிடம் காத்தவராயன் கல்வி கற்றார்.

(ஆ) 1914 மே மாதம் 5 ஆம் நாள் பொன்னுடல் நீத்து புகழுடம்பு எய்தினார்.

(இ) பிரம்ம ஞான சபை ஆல்காட் தொடர்பால் சென்னையில் முக்கியமான ஐந்து இடங்களில் பஞ்சமர் பள்ளிகள் எனத் தலித்துகளுக்கு இலவசப் பள்ளியை நிறுவினார்.

(ஈ) சென்னை ஆயிரம் விளக்கில் உள்ள மக்கிமா நகரில் 1845 ஆம் ஆண்டு மே திங்கள் கந்தசாமி இணையருக்கு பண்டிதர் பிறந்தார்.

ClassResult.in

ஆ. கீழ்க்காணும் பாடலைப் படித்து கேட்கபடும் வினாக்களுக்கு விடை எழுதுக. *4×1=4*

கண்களில் இருந்தே
காட்சிகள் தோன்றும்!
துயரத்தில் இருந்தே
காவியம் தோன்றும்!
சூரியன் மறைந்தால்
விளக்கொன்று சிரிக்கும்!
மரமொன்று விழுந்தால்
மறுபடி தழைக்கும்!
நதிகளை திறந்தால்
கழனிகள் செழிக்கும்!

2. கழனிகள் செழிக்க வழி என்ன?

3. கண்களில் இருந்து தோன்றுவது எது?

4. எப்போது விளக்கு சிரிக்கும்?

5. துயரத்தில் கிடைப்பது என்ன?

ClassResult.in

இ. கீழ்க்காணும் பத்தியைப் படித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக. *4×½=2*

'நாவலர் பெருமான்' எனப் போற்றப்படும் ஆறுமுக நாவலர் 1882 இல் யாழ்ப்பாணத்து நல்லூரில் பிறந்தார். தந்தையார் – கந்தப்பிள்ளை: தாயார் – சிவகாமி. பெற்றோர் இட்டபெயர் 'ஆறுமுகம்'. தமிழில் பெரும்புலமை பெற்று அரிய சாதனைகள் புரிந்தபின் 'நாவலர் பெருமான்' என்று அழைக்கப்பட்டார். இவரது அளப்படும் சாதனை குறித்து நாவலர் பெருமான் எனும்

தமது நூலில் பேராசிரியர் கா. மாயாண்டி பாரதி விரிவாக எழுதியுள்ளார்.

6. 'நாவலர் பெருமான்' எனும் நூலின் ஆசிரியர் யார்?

7. ஆறுமுக நாவலரின் பெற்றோர் யாவர்?

8. ஆறுமுக நாவலர் எப்போது பிறந்தார்?

9. 'நாவலர் பெருமான்' என ஆறுமுக நாவலர் அழைக்கப்பட காரணம் என்ன?

ஈ. கீழ்க்காணும் விளம்பரச் செய்தியை படித்து கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுக. 4×½=2

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

ஜெ. ஜெ. நகர் கோட்டம்

<u>முக்கிய அறிவிப்பு</u>

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஜெ. ஜெ. நகர் கோட்டத்திற்கு உட்பட்ட அம்பத்தூர் திட்டப் பகுதி 92 உயர் வருவாய் பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு வாகன நிறுத்துமிடத்திற்கான குலுக்கல் வரும் 23–04–2018 அன்று காலை 11.00 மணியளவில் சென்னை – 101 திருமங்கலம், அண்ணா நகர் மேற்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய வணிக வளாகத்தில் மூன்றாம் தளத்தில் அமைந்துள்ள செயற்பொறியாளர் (ம) நிர்வாக அலுவலர் ஜெ. ஜெ. நகர் கோட்டம் அலுவலகத்தில் நடைபெறுவதால் திட்டப்பகுதியில் உள்ள அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள கேட்டு கொள்ளப்படுகிறது.

செயற்பொறியாளர்

ஜெ. ஜெ. நகர் கோட்டம்.

10. இந்த விளம்பரத்தை வெளியிட்ட விளம்பர நிறுவனம் எது?

11. விளம்பரத்தின் நோக்கம் என்ன?

12. விளம்பர நிறுவனம் அமைந்துள்ள இடம் எது?

13. குலுக்கல் நடைபெறும் நாளும் நேரமும் குறிப்பிடுக.

ClassResult.in

**II.** சுயமாக எழுதுதல் – படைப்பாற்றல் **(18 மதிப்பெண்கள்)**

உ. கீழ்க்காணும் வினாக்களுக்கு ஐந்து வாக்கியங்களில் விடை எழுதுக. *2×2=4*

**14.** கோகிலாவின் பண்பு நலன்கள் பற்றி எழுதுக.

**15.** அகழாய்வு குறித்து எழுதுக.

**ஊ.** கீழ்க்காணும் வினாவிற்கு பன்னிரண்டு வாக்கியங்களில் விடை எழுதுக. *1×4=4*

**16.** குறட்டை ஒலி கதையின் கருத்தும் பொருளும் மாறாமல் சுருக்கி எழுதுக.

**(அல்லது)**

அண்ணா எழுதிய கடிதத்தின் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

**எ.** கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக. *2×5=10*

**17.** மாற்றுச் சான்றிதழ் கோரி தலைமையாசிரியருக்கு விண்ணப்பக் கடிதம் எழுதுக.

ClassResult.in

**(அல்லது)**

'மாணவரும் சமுதாயத் தொண்டும்' எனும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

**18.** 'சுற்றுப்புறத் தூய்மை' எனும் தலைப்பில் ஒரு கையெழுத்து இதழ் தயார் செய்க.

**(அல்லது)**

'தேசிய ஒருமைப்பாடு' குறித்த உன் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

---

This Question Paper contains 4 Printed Pages.]

**02A(B)**

# TAMIL, Paper-II

*(First language)*

**Parts A and B**

**Time : 2 hours 45 minutes]** **[Maximum Marks : 40**

குறிப்பு :

1. கொடுக்கப்பட்ட வினாக்களுக்குரிய விடைக்கான எழுத்தை அடைப்புக்குறிக்குள் மட்டுமே எழுத வேண்டும்.
2. பகுதி – 'ஆ' விற்கான விடைகளை இவ்வினாத்தாளில் மட்டுமே எழுத வேண்டும்.
3. பகுதி – 'ஆ' வினாத்தாளை பகுதி – 'அ' விடைத்தாளுடன் இணைத்து தர வேண்டும்.

## Part-B

**Time : 30 minutes** **Marks : 10**

**III. மொழித்திறன்** (10 மதிப்பெண்கள்)

ClassResult.in

(ஏ) கீழ்க்காணும் வினாக்களுக்கு உரிய விடையைத் தேர்ந்தெடுத்து அதற்குரிய எழுத்தை அடைப்புக் குறிக்குள் எழுதவும். *20× ½ =10*

1. திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார். – இதனை செயப்பாட்டு வினைத் தொடராக மாற்றுக. [ ]
   - (A) திருக்குறளை இயற்றியது யார்?
   - (B) திருவள்ளுவர் இயற்றினார் திருக்குறள்.
   - (C) திருவள்ளுவர் திருக்குறளை இயற்றவில்லை.
   - (D) திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது.

2. அமுதன் உணவு உண்டான். – இதனை பிறவினைத் தொடராக மாற்றுக. [ ]
   - (A) அமுதன் உணவை உண்பித்தான்.
   - (B) அமுதன் உணவை உண்ணவில்லை.
   - (C) அமுதன் உணவை உண்ணாமலில்லை.
   - (D) உணவை உண்டது யார்?

7. கயல்விழி பள்ளிக்கு வரவில்லை. – இது எவ்வகைத் தொடர் [ ]

(A) வினாத் தொடர் (B) எதிர்மறைத் தொடர்
(C) கட்டளைத் தொடர் (D) உடன்பாட்டுத் தொடர்

8. சாத்தானின் தந்தை யார்? – இது எவ்வகைத் தொடர் [ ]

(A) உணர்ச்சித் தொடர் (B) எதிர்மறைத் தொடர்
(C) கலவைத் தொடர் (D) வினாத் தொடர்

9. மா, பலா, வாழை முக்கனிகள் ஆகும். – இது எவ்வகைத் தொடர் [ ]

(A) தனிநிலைத் தொடர் (B) தொடர்நிலைத் தொடர்
(C) கலவைத் தொடர் (D) கட்டளைத் தொடர்

10. குமரன் நன்றாக படித்ததால் தேர்வில் வெற்றி பெற்றான். – இது எவ்வகைத் தொடர் [ ]

(A) தொடர்நிலைத் தொடர் (B) கலவைத் தொடர்
(C) கட்டளைத் தொடர் (D) தனிநிலைத் தொடர்

ClassResult.in

11. 'அங்கே கிடப்பது பாம்போ? கயிறோ? – என வினவும் வினா' – எவ்வகை வினா [ ]

(A) அறிவினா (B) அறியா வினா
(C) ஐய வினா (D) கொடை வினா

12. 'ஒரு தொழிலை செய்யும் படி ஏவும் வினா' – எவ்வகை வினா. [ ]

(A) ஏவல் வினா (B) அறிவினா
(C) கொளல் வினா (D) கொடை வினா

13. 'இது செய்வாயா?' என்பதற்கு 'செய்யேன்' எனக் கூறும் விடை எவ்வகை விடை [ ]

(A) நேர்விடை (B) மறைவிடை
(C) ஏவல் விடை (D) சுட்டு விடை

3. கண்ணகி பாண்டியனை நோக்கி, 'என் கணவன் கள்வன் அல்லன் என்றாள். – இதனை அயற்கூற்றாக மாற்றுக. [ ]

(A) கண்ணகி பாண்டியனை நோக்கி தன் கணவன் கள்வன் அல்லன் என்றாள்.

(B) கண்ணகி பாண்டியனிடம் என் கணவன் கள்வன் அல்லன் என்றாள்.

(C) கண்ணகி பாண்டியனிடம் தன் கணவன் கள்வன் அல்லன் என்றாள்.

(D) கண்ணகி பாண்டியனை நோக்கி என் கணவன் கள்வன் அல்லன் என்றாள்.

4. மாடு பயிரை மேய்ந்தது. – இதனை எதிர்மறைத் தொடராக மாற்றுக. [ ]

(A) பயிரை மேய்ந்தது எது?

(B) மாடு பயிரை மேயவில்லை.

(C) பயிர் மாட்டால் மேயப்பட்டது.

(D) மாடு பயிரை மேயாமலில்லை.

ClassResult.in

5. குமரன் உணவு உண்டான். – இதனை பொருள்மாறா எதிர்மறைத் தொடராக மாற்றுக. [ ]

(A) குமரன் உணவு உண்ணாமலில்லை.

(B) உணவை உண்டது யார்?

(C) குமரன் உணவு உண்ணவில்லை.

(D) உணவு குமரனால் உண்ணப்பட்டது.

6. என்னே! அழகு தாஜ்மகாலின் அழகு! – இது எவ்வகைத் தொடர் [ ]

(A) கட்டளைத் தொடர்

(B) எதிர்மறைத் தொடர்

(C) உணர்ச்சித் தொடர்

(D) வினாத் தொடர்

14. 'இது செய்வாயா?' என்பதற்கு 'நீயே செய்' எனக் கூறும் விடை எவ்வகை விடை [ ]

(A) மறைவிடை (B) சுட்டு விடை
(C) நேர்விடை (D) ஏவல் விடை

15. 'இது செய்வாயா' என்பதற்கு 'உடம்பு நொந்தது' எனக் கூறும் விடை எவ்வகை விடை [ ]

(A) உற்றதுரைத்தல் விடை (B) சுட்டு விடை
(C) உறுவது கூறல் விடை (D) நேர்விடை

16. கம்பி நீட்டல் — மரபுத் தொடருக்கான பொருள் [ ]

(A) அலைந்து திரிதல்
(B) சொல்லி கொள்ளாமல் செல்லல்
(C) பயனின்றி இருத்தல்
(D) மிகுதியாக பேசுதல்

17. கானல் நீர் — மரபுத் தொடருக்கான பொருள் [ ]

(A) இருப்பது போல் தோன்றும் ஆனால் இராது.
(B) சொல்லி கொள்ளாமல் செல்லல்
(C) பயனின்றி இருத்தல்
(D) பொய்யழுகை

ClassResult.in

உவமைத் தொடர்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

18. அளலிடைப்பட்ட புழுவைப் போல் ................................................

...............................................................................

19. மழை காணாப் பயிர் போல ................................................

...............................................................................

20. நிலவும் வானும் போல

...............................................................................